பதிவு எண்—M 5720. உ வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 திருகுலம், (தா)ம்பாக்கம்; விசய, ஐப்பசி; 13—11—53 தளிர்-4

774

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

பயன் தெரிவார் செயல்!

ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு உயிர் வாழ்வதே உலகியல்பு! அதனால் 'உலக நடை' என்பதை உதவியியல்பு அல்லது ஒப்புரவு ஒழுக்கம் என்று பெரியோர் கருதினர்.

எத்தகையவரும் பிறர் உதவியில்லாமல் உலகத்தில் வாழ்ந்து விடுதல் இயலாது. அதனாலேயே, முற்றத் துறந்த முனிவரும், இல்வாழ்வார் உதவிகளையும் எல்லாவற்றிற்கும் மேலாகத் திருவருள் உதவியையுங் கட்டாயம் பெறக்கூடிய நிலைமையில் இருக்கின்றனர்! அங்ஙனமானால், ஏனை இல்வாழ்வார் முதலிய நிலையினர்க்கு 'ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்வது' என்பது எவ்வளவு இன்றியமையாததாய் இருக்கின்றது. அதனாலன்றோ, ஒப்புரவு ஈகை என்னும் ஒழுக்கங்களை இல்லற வொழுக்கங்களாக ஆசிரியர் கருதினர்!

இங்ஙனம் உதவிக்கொள்ளும் நிகழ்ச்சியில் காரணங் கருதாமல் உதவுதலும், காலத்தில் உதவுதலும், பயன் கருதாமல் உதவுதலும் நேர்தல் போல, நேரத்துக் கேற்றபடி அளவில் குறைவு நிறைவாகவும் உதவுதல் நேரலாம்.

ஆயினும், குறைவாக உதவுதலை அளவு நோக்கத்தில் வைத்துப் பார்த்தலாகாது. உதவுவோர் கருத்து நிலை கண்டு மதிப்பதே தகுதி.

உள்ளம் அன்பின் வயப்பட்டதாயிருந்தால், உதவிய அச் சிறு பொருளே பெரும்பயன் விளைத்தலும் கூடும்; அதற்கேற்ற வாய்ப்புகள் நேர்வித்தலுங் கூடும். கிடைத்த அளவு, ஓர் உதவியேயாகும்.

ஆதலால், பொருளின் அளவைப் பாராமல் பயனின் பெருமையையே பார்ப்பது, பயன் தெரிவார் கடமையாம்!

மக்கள் இத்தகைய பெருந்தன்மையில் நடந்துகொண்டால் உலகத்தில் மேன்மேல் உதவிகள் பெருகி, அன்பு அருள் இனிமைகள் இனிது ஒளிவிடும்!

தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்.

தினைத்துணை நன்றி செயினும்-தினையளவு உதவி செய்தாலும், பனைத் துணையாக் கொள்வர்—அதனைப் பனையளவாகக் கருதுவர், பயன் தெரிவார்—கருத்தறிந்தவர்.

தினையளவு பனையளவு என்பன, முறையே சிறுமைக்கும் பெருமைக்கும் வழங்குதல் மரபு. நன்றி என்றது, இங்கே உதவி என்னும் பொருட்டு.

செயினும் என்னும் உம்மை, பெரும்பாலும் பனையளவு பேருதவியே செய்வர் என்று குறித்தலால் எச்சமொடு எதிர்மறையும் ஆம்; ஏதோ நேரத்து வாய்ப்பு, தினையளவாகச் செய்யுமாறு நேர்ந்துவிட்டது என்பது குறிப்பு; ஆயினும், அத் தினையளவே பனையளவு பயன் செய்வதும் உண்டு என்பது கருத்து; ஆதலால், அப் பயன் தெரிவார், அதனைப் பனையளவாகவே கொள்வர் என்றார்.

பொருளின் அளவை விட அதனாலாகும் பயன் அளவும், அதனை உதவுவாருடைய உள்ளத்தின் மேன்மையும் பனையளவு பெருமையுடையனவாதலின், அவையே முதன்மையாகக் கருதத் தக்கவை என்றபடி.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	விசய, ஐப்பசி,	தளிர்
6	13-11-53 வெள்ளி	4

தாய்மொழி - பொது மொழி வளர்ச்சிகள்

மக்கள் வாழ்வியலுக்குத் தாய்மொழி அடிப்படையானது.

நாடு அரசியல் சமயம் முதலிய எல்லாம் அதனை அடிப்படையாகக் கொண்டே இருக்கவேண்டும். அப்போதே அவை சிறக்கும்.

உரிமை உணர்ச்சி என்பது எந்தத் துறையிலும் பெரும்பாலும் தாய்மொழி அடிப்படையிலேயே தோற்றும்.

ஒரு நாட்டு மக்கள் தம் தாய்மொழி எந்தத் துறையிலாவது முதன்மை பெறவில்லை என்றால், அத்துறையில் தாம் இன்னும் முன்னேறவில்லை அல்லது முன்னேறியிருந்தாலும் இப்போது அத்துறையில் சிறுமைப்பட்டிருக்கிறோம் என்றே உணர்ந்து உணர்ச்சி பெறுவார்கள்.

இவையெல்லாம் அடிப்படை உண்மைகள். இவைகளை மனத்திட் கொண்டு இந்தியாவின் இன்றைய அரசியல் நிலைகளைச் சிறிது பார்ப்போம்.

இந்தியா ஒரே அரசியலின் கீழ் மொழிகள் பல வழங்கும் நாடுகளை யுடைய ஒரு பெரு நாடு. அது உரிமை பெற்றவுடன் அதிலுள்ள பல மொழி மக்கட் பிரிவினரும் மேமேலே கண்ட அடிப்படை உண்மைகளை ஒட்டி உணர்ச்சி பெற்று முன்னேற முயல்வது இயற்கையும் கடமையுமாகும்.

அதனால் அதனுடைய மத்திய அரசு அவ்வம் மக்களின் உணர்ச்சிக்கும் முயற்சிக்கும் மதிப்பும் இடமும் கொடுத்து அதே நேரத்தில் நாட்டில் குழப்பமும் பிணக்கும் நேராதபடி மிகவும் விழிப்பாகப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

எவ்வளவு நேர்மையாகவும் விழிப்பாகவும் இருந்தாலும் அவ்வப் பிரிவிலுள்ள மக்களும் சத்தம் குறைகளையே பெரிதுபடுத்திக் காட்டி, பலவகை ஐயவுணர்ச்சியும் திரிபுணர்ச்சியும் கொண்டு கிளர்ச்சிகள் செய்யத் தொடங்கி விடுவார்கள். மக்கள் ஆட்சியில் கிளர்ச்சிகள் செய்யும் வாய்ப்புகளே மிகுதியாக இருக்கின்றன. எளிதாகக் குழப்பங்களை உண்டாக்கிவிடக் கூடும். அதனால் கிளர்ச்சிகள் செய்வதற்கே இடம் இல்லாதபடி (உரிமைகளைப் பறித்தல்ல, கடமைகளை உடனுக்குடன் செய்து) பார்த்துக்கொள்ள வேண்டும்.

இனி, மொழியால் மட்டுமன்றிச் சாதி சமயங்களாலும் இந்தியா பல்வேறு பிரிவாக இருக்கிறது. அதனாலும் குழப்பங்கள் மிகுதியாக இருக்கின்றன.

காலம் போகிற போக்கில் சாதி வேற்றுமைகளைப் பாராட்டக்கூடாது என விதி செய்தும், அரசியலைச் சமயச் சார்பற்ற நடுநிலை அரசியல் எனக் கிளந்தும் சாதி சமய வேறுபாடுகளால் வரக்கூடிய கேடுகளைச் சமாளிக்க ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன.

ஆனால், மொழி வேற்றுமை உணர்ச்சிகளால் உண்டாகக் கூடிய குழப்பங்களை அப்படியெல்லாம் 'மொழிச் சார்பற்ற அரசியல்' என்று கிளந்து சமாளித்துவிட முடியாது.

தாய் மொழி உணர்ச்சியையோ அதன் அடிப்படையான கிளர்ச்சிகளையோ என்றைக்கும் எந்த வகையாலும் அடக்கிவிட முடியாது.

ஆகவே மொழி வகையில் இந்தியத் தலைமை அரசு மிகவும் முன்விழிப்பாக நடக்கவேண்டும்.

இதனை இந்திய அரசியல் தலைவர்கள் பலர் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்றே அவர்கள் பேச்சுக்கள் புலப்படுத்துகின்றன.

இனி, இந்தியா முழுவதும் ஒரு தலைமை அரசில் இணைந்தே இருக்கவேண்டும் என்று விழைவோர் எவரும் அவ்வகையில் நடைபெறவேண்டிய பொது அரசியல் நிகழ்ச்சிகளுக்கு என்று ஒரு பொதுமொழி கட்டா

யம் வேண்டுமென்பதை ஒப்புக் கொள்வார்கள்.

அத்தகைய பொது மொழி "இந்தி" என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் விழிப்பாக இருக்கவேண்டும்! கட்டாயப்படுத்துதல் கூடாது! நாட்டு மொழிகள் அதனல் பாதிக்கப்படும் என்று எண்ணும் நிலைகளை உண்டாக்கவே கூடாது! என்று தலைவர்களிற் சிலர் அவ்வப்போது எச்சரிக்கை செய்கிறுர்கள்.

வெறும் பேச்சும் எச்சரிக்கையும் பயன் செய்யாது. மொழி வழி மாநிலப் பிரிவைச் செய்து அவ்வம் மாநிலத்தில் ஆட்சியைத் தாய்மொழியிலேயே இயங்கச் செய்யாமுன், பொது மொழியாகிய இந்தியின் பரப்புதலுக்குச் செய்யப்படும் எந்தச் சிறு செயலும் ஐயுணர்வோடேயே பார்க்கப்படும் என்பது உறுதி.

நூற்றுக்கு எண்பது பேர் தாய்மொழி கூடப் படிக்கத் தெரியாத நிலையில், அதற்கான ஏற்பாடுகளைப் பேரளவிலும் விரைந்தும் செய்யாமல் பொது மொழி வளர்ச்சிக்கு முயல்வது முறையுமல்ல; பயனும் தராது.

இந் நிலையில், சில தலைவர்கள் அங்கங்கே இந்திக்குப் பதில் வழக்கிறந்துபோன வடமொழியைப் பொதுமொழியாக்குவதே நல்லது என்றும், மொழி வழிப் பிரிவு இந்திய ஒற்றுமையைக் குலைக்கும் என்றும், இந்திய மொழிகள் எல்லாவற்றிற்கும் ஒரே வகையாகத் 'தேவநாகரி' எழுத்துக்களையே வழங்குவிக்கலாம் என்றும் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பேசி விடுகிறுர்கள்.

இத்தகைய பேச்சுக்கள் மக்களைப் பெருங் குழப்ப நிலைக்குக் கொண்டுபோய் விடும் என்று சொல்லவும் வேண்டுமோ?

REGISTRAR OF BOOKS

ஒப்புக்கொண்டபடி மட்டுமல்ல, முறைப்படியும் மொழி வழிப் பிரிவைச் செய்யாமல் காலந் தாழ்க்கத் தாழ்க்கச் சிக்கல்கள் மிகுபடுமே தவிர குறைவதில்லை.

எவ்வளவோ சிக்கல்களுக்கிடை மிகக் குறுகிய நாளில் இந்திய நாட்டையே இரு கூருக்கிய தலைவர்களுக்கு மொழி வழிப் பிரிவுகளைச் செய்வது தானு கடினம்?

'உண்மையிலேயே நாம் உரிமை பெற்றிருக்கிறேம்' என்றும், 'இனி நம் தாய்மொழி வளர்ச்சிக்கும் அதனல் நம் வளர்ச்சிக்கும் தடையேதுமில்லை' என்றும் ஆங்காங்குள்ள பொதுமக்கள் எண்ணி, ஐயத்துக்குச் சிறிதும் இடமில்லாததால் அன்போடு இந்தியாவின் கூட்டுப் பெருமைக்கும் வலிமைக்கும் மனமார ஆதரவு செய்கிற நிலை, மொழிவழிப் பிரிவு நடந்து தாய்மொழி ஆட்சி உண்டானல்தான் உண்டாகும்.

இவ் வேற்பாட்டுக்குப் பின்னரே பொதுமொழி வளர்ச்சிக்கும் நாட்டு மக்கள் அங்கங்கும் தாராளமாக இடந்தருவார்கள்.

இந்தியாவின் பொது நலத்துக்கும் ஒற்றுமைக்கும் இதனினும் முதன்மையானதாக, உடனடியானதாக வேறு எதுவும் இருப்பதற்கில்லை.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தீயதினின்றும் விலக்கி நல்லதை நாடி மேற்கொள்வதே பகுத்தறிவாமெனக் கண்டோம்.

இவ்வறிவு இன்றைய நிலையில், இக்கால உலகில், கெட்ட சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மனத்திற்குத் தோற்றேவிடுகின்றது.

எனவேதான் நாட்டில் இன்று அறம், நீதி, சமயநிலை போன்ற பண்பாடுகள் முழுவெற்றியடையவில்லை.

அப் பண்பாடுகள் முழுவெற்றியடைய, கெட்ட சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு வலிவடைந்துள்ள மனத்தையும் அடக்கி 'அறிவு' வெற்றியடைதல் வேண்டும்; அவ்வாறு, 'அறிவு' வெற்றி பெறின், நம் நாடு எந்நாட்டினும் சிறந்து, ஒப்புயர்வற்று ஓங்கி விளங்கும்.

மேலும், மனிதன், மனிதனுக வாழ்ந்து பேரின்ப வீட்டை அடைதற்கும் இயலும். அதுவே மனிதப் பிறவியின் பயனுமன்றே?

"உரனென்னுந் தோட்டியான்
ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர்
வித்து"

Telegrams: "RAMBROS"
N.Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

மனிதனும் பகுத்தறிவும்

(வே. ந. நா.)

(முன் தொடர்ச்சி)

மனமும் அறிவும்:

மனமும் அறிவும் ஒன்றாகத் தோற்றுகின்ற போதிலும் இவ்விரண்டிற்கும் சிறிது மாற்றமிருக்கத்தான் செய்கிறது. இதனை, ஓர் உவமையால் விளக்குவோம்.

ஒருவன் மற்றொருவனைக் "கொலை செய்யவேண்டும்" என்று எண்ணுவதாகக் கொள்வோம்.

அவன் எண்ணும் அவ்வெண்ணமே மனமாகும். பிறகு, கொலை செய்ய நெருங்குதல், மனத்தின் செயலாகும். அவ்வாறு நெருங்குங்கால் அவன் எண்ணுகிறான்—"கொலை செய்வது பாவமாயிற்றே, செய்யலாமா? இத் தீய செயலை கூடாது, கூடவே கூடாது" என. அதனைத்தான் மனச்சான்று என்றும் அல்லது உள்மனம் என்றும், மெய்யறிவாம் பகுத்தறிவென்றுங் கூறுகின்றனர்.

பிறகு கொலை செய்யும் எண்ணத்தை விடுத்து, நீங்குகின்றான். அதனை அறிவின் செயலென்பர்.

புலனறிவால் உண்டாகும் எண்ணம் மனமாகும்; அம்மனத்தின் நல்ல முடிபே—செயல் தெளிவே, அறிவாகும்.

நல்லவல்லாத மற்ற எண்ணங்களை மனமென்றும், நல்ல எண்ணமாக மாறினால் அது அறிவென்றும் ஆன்றோர் நவின்றனர்.

இவ்வறிவும், மனமும் எந்த அறிவிற்கு வேற்றுமை கொண்டுள்ளனவென்பதை இரு சிறு எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

பச்சையாக வுள்ளபோது 'இஞ்சி'யாக இருப்பது காய்ந்த உடனே (உலர்ந்த உடனே) 'சுக்'காகி விடுகின்றது.

உருக்காத விடத்து 'வெண்ணெய்' எனப்பட்டது, காய்ச்சிய வுடனே 'நெய்' என மாற்றி மொழியப்படுகின்றது.

அதுபோலவேதான் 'மனமும் அறிவும்' தீயதும் நல்லதுமாகப் பிரிந்து வேறுபட்டுள்ளது.

அறிவானது சிற்சில சமயங்களில் மனத்திற்குத் தோற்றே விடுகின்றது, அடங்கியே விடுகின்றது.

ஒருவன் திருட எண்ணுகிறான் எனக் கொள்வோம்; அவ்வெண்ணமே மனமாகும். தான் கைப்பற்றவேண்டிய பொருளை நெருங்க நெருங்கத் "திருடுவது தவறாயிற்றே, பல ஆண்டு சிறையில் இருக்க நேரிடுமே, பின் நம் மக்கள் நிலைகலங்குவார்களே" என எண்ணுகிறான். அவ்வெண்ணமே மனச்சான்று அல்லது பகுத்தறிவென முன்பு அறிந்தோம்.

அவ்வாறு அவன் "அறிவு" அவனுக்கு நேர்மை புகட்டிய போதிலும் திருட்டை நிறுத்தவில்லை. பிறகு, அதனாலாம் இன்னலுக்குட்பட்டு வருந்துகின்றான்.

இவ்விடத்தில் அறிவைவிட மனம் வன்மைவாய்ந்ததென அறிகின்றோம். அவ்வாறு மனம் அறிவையும் மீறுதற்குக் காரணம்? – சூழ்நிலை. – அதாவது இயற்கை செயற்கைச் சூழ்நிலையாலுண்டாகும் புறவகத் தூண்டலெனலாம்.

சூழ்நிலையும் மனமும்:

(பௌதிகம்) பருமைச் சூழ்நிலைக்கும் (**Physical Environment**) மன்பதைச் (சமூகம்) சூழ்நிலைக்கும் (**Social Environment**) மனிதன் தன்னை இணக்கம் (**Adjustment**) செய்துகொள்ள வேண்டும். அதாவது சூழ்நிலையால் ஏற்படும் அகப்புறத் தூண்டல்கட்கு ஏதாவது துலங்கலை—எதிருன்றலை உறுதியாகச் செய்தாலொழிய வாழ இயலாது.

ஆகவே, எத் தூண்டல் வன்மை வாய்ந்திருக்கின்றதோ அத் தூண்டலுக்கே மனிதன் முதன்மையாகத் துலங்கல் செய்யவேண்டியவனாக இருக்கின்றான்.

எனவே, ஒருவன் பன்னாட்களாகப் பட்டினி கிடந்து அதன் கொடுமையினால் களவு செய்யச் செல்லுங்கால் தவறென்று அறிவு தெளிவித்தபோதிலும், அவனுடைய வன்மை வாய்ந்த ஏழ்மைச் சூழ்நிலையினால் அவன் தாக்கப்படும்போது— தூண்டப்படும்போது அதற்கொரு துலங்கல் கட்டாயம் செய்தாகவேண்டிய முறையில் "திருடுதல்" செய்கின்றான். இவ்வகையான, சூழ்நிலையின் மிகு விரைவான தாக்குதலின்போதும் தூண்டலின் போதுங்கூட மனத்தை அடக்கி, வேறு நல்ல வழியில் தனது பசிப்பிணியை நீக்கிக் கொள்ள முயலுதல்வேண்டும். அதுவே மனிதத்தன்மையாம்.

தீயதையும் நல்லதையும் ஓர்ந்தறியாது, தூண்டலுக்கு ஏதாவதொரு செயல், அதாவது தெளிவற்ற துலங்கலைச் செய்தல் விலங்குத் தன்மையே யொழிய மனிதத் தன்மையன்று.

மனமானது சூழ்நிலையின் தாக்குதல்களினால் ஒரு நேரத்தில் விரும்பியதை மற்றொரு காலத்தில் வெறுக்கின்றது. ஆகவே, சூழ்நிலைக்கேற்ப, விரும்பவும் வெறுக்கவும் செய்யும் எந்த ஒருகாலத்திலும் அறிவின் வழி நின்று எங்கெங்கெல்லாமோ செல்லும் மனத்தை முறைகாணச் செய்து பகுத்தறிவுள்ளவனாக நடந்து கொள்ள வேண்டும்.

ஈண்டு வள்ளுவன், கூறிய குறளொன்றை நினைவுபடுத்தல் நன்று;

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

நிறைவான பகுத்தறிவு:

மனிதன் மேற்கூறிய பகுத்தறிவை ஒரு சில கலைகளிலேதான் பெற்றிருக்க இயலுமேயொழிய, அனைத்திலும் எம்மனிதனும் பகுத்தறிவைப் பெற்றவனாக ஆகிவிட முடியாது.

ஒருவன் அறிஞனென்பதனாலேயே எல்லாக் கலைகளிலும் பகுத்தறிவைப் பெற்றிருப்பான் எனக் கூறிவிட முடியாது. ஏனெனில், ஒருவன் வேடன் என்பதனாலேயே ஏனைய (நீர் வாழ்வன, பறப்பன போன்ற) உயிர்களையும் வேட்டையாடுந் திறமையை, பகுத்தறிவைப் பெற்றிருப்பான் எனக் கூற முடியுமா?

சிற்பி சிற்பவேலைக்கான பகுத்தறிவை மிகுதியும் பெற்றிருப்பானென்றால், பொறிகளை இயக்குவதிலும் அவ்வறிவைப் பெற்றிருக்க வியலுமா? அவ்விடத்தே அவன் அறிவற்றவனாகின்றானல்லவா?

கவிஞர், பாடலியற்றுவதில் பகுத்தறிவைப் பெற்றிருக்கலாம்; அதனைச் சார்ந்த மொழிக் கலைகள் சிலவற்றிலுங்கூட அவ்வறிவைப் பெற்றிருக்கலாம்; ஆனால், மொழித் துறைக் கப்பாற்பட்ட கப்பல் கட்டும் வேலையிலும் அறிவுடையவனாக இருக்கவியலுமா?

ஆகவே, எவ்வொரு மனிதனும் நிறை பகுத்தறிவைப் பெற இயலாது. ஓரோவொரு துறையிலேயே பெற்றிருக்க இயலுமென அறிகின்றோம்.

அவ்வொவ்வொரு துறையிலுங்கூட முழுப் பகுத்தறிவைப் பெறுவதென்பதும் இயலாமையே.

அறிவும் நூலும்:

இப் பகுத்தறிவை ஒருவன் நூற்கல்வியின் மூலம் பெறுகின்றான்; மற்றொருவன் பழக்கக் கல்வியின் மூலம் பெறுகிறான்.

பிறிதொருவன் சூழ்நிலையால் பெறுகின்றான். ஆகவே, ஒருவன் நூற்கல்வி கற்கவில்லையாயின் கட்டாயம் அவன் எத்துறையிலும் பகுத்தறிவைப் பெற்றிருக்க இயலாது எனக் கூறிவிட முடியாது. ஏனெனில், குளத்தில் குளிக்காதவன் எவ்வகையிலும் நீந்த அறிந்திருக்க முடியாது எனும் குருட்டு வாதத்தை யொக்கும் அது.

நூற்கல்வி கற்காமலேயே உலகில் பலர் 'சிறந்த அறிஞ' ரென்னும் பெபரைப் பெற்று உயர்ந்து வாழ்ந்துள்ளதைக் காண்கின்றோமல்லவா?

நூற்கல்வியே இன்னதென்றறியாத "சிவாஜி", ஒரு மாபெரும் அரசாட்சியையே அடக்கி ஆண்டு பெரும் புகழ் பெற்ற செய்தியை வரலாற்றின் மூலம் அறிகின்றோம்.

ஒருவன், ஓவியக் கலையிலும் நூல் பல படித்திருப்பதனாலேயே அவன் சித்திரம் வரைவதில் நிறைந்த அறிவைப் பெற்றிருப்பான் எனக் கூற முடியாது. அதற்குப் பழக்கம் தேவை; கைப் பழக்கம் தேவை.

ஒருவன் இசை நூல்கள் பலவற்றைப் படித்தறிந் துணர்ந்திருப்பினுங்கூட, இன்னிசையோடு பாடுந் திறன் அறிவைப் பெற்றுவிட முடியாது. அதற்குச் சிறந்த அமைப்பும் நிறைந்த பயிற்சியும் தேவை.

ஆதலினாலே, நூற்கல்வி மனதை விரிவு செய்யத் துணை செய்யும் ஒரு கருவியே தவிர, மேற்கொண்ட துறையைப் பற்றி முழு அறிவையும் அளித்திடும் இயந்திரமெனக் கூறி விட முடியாது.

அறிவின் இன்றைய நிலை:

மனமானது எப்பொழுதும் எண்ணிக்கொண்டே இருக்குந் தன்மையது. எக் காரணத்தாலும் தடையுறாது; வேண்டுமானால் ஒரு துறையினின்றும் மற்றொரு நிலைக்குத் தாவுமேயொழிய எண்ணம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

இவ்வாறான மனத்தின் எண்ண வோட்டத்தைக் குறிப்பிட்ட நேரமாவது தடுத்து நிறுத்தியவர்கள் அதாவது மெய்யறிவுடன் ஒன்றைச் செய்தவர்கள் ஒரு சிலர் உண்டென்றால், அது பண்டைக்காலத்தில் நமது நாட்டிலிருந்த ஞானம் பெற்ற ஒரு சில முனிவர்களே என்று கூறலாம்.

மனம் தீயதும் நல்லதுமான எண்ணவோட்டத்தை யுடையது;

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

மொழித் துறை:

* ஈரடி இருநூறு *

நூலாசிரியர் – திரு. கே. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A.
(ஆசிரியர் அவர்களின் உரையுடன்)

அதிகாரம் 8:

திறன் ஆய்தல்

அஃதாவது, பாட்டியற்றுதற்கு இன்றியமையாததோர் உறுப்புப் போல்வதாகிய பொருட்டிறன் ஆராய்தல் கூறினார்.

1. தெள்ளிய ரென்பர்
திறனாய்ந்தார் ஆய்ந்தபின்
ஒள்ளியர் ஊறில் லவர்.

கலை பயிலுங்கால் அதன் திறனை ஆராய்ந்தவரே தெளிந்தார் எனப்படுவர். ஆராய்ந்தபின் அவர் அறிஞராய்த் தமக்கும் பிறர்க்கும் தீங்கில்லராய் விளங்குவர்.

தெள்ளியரென்பது ஒள்ளியராய் ஊறில்லவராய் விளங்குக வென விதந்தவாறு; என்னை? அறிவு ஒளியும் ஊறு பயவா நெஞ்சமு முடையாரே தெளிவுடைய ரெனப்படுவாராகலினென்பது. திறனென்பது, கூறு; அது சொற் கூறு, பொருட் கூறு, இரண்டும் இணையுங் கலைக் கூறு, அவை பயக்கும் சுவைக் கூறு முதலாகப் பலவாம். ஆய்தலாவது அவற்றின் நுண்ணிய நிலைகளைக் காண்டல். 'ஆய்தல்.......' என்றார் தொல்காப்பியனாரும். திறனறியாதார் தாமும் இழுக்குடையராய்ப் பிறர்க்கும் அதனால் இழுக்கம் பயப்பாராயிருத்தலின், ஆய்ந்தவர் ஊறில்ல வரென்றார். இதனால் திறனாய்வார் நலன் கூறப்பட்டது.

2. கலையுணர் வெய்தியும்
கற்றுணர்ந்தும் என்னாம்
கலைத்திறன் ஆய்வில் கடை.

கலைகளைக் கற்றற்குரிய உணர்வையடைந்தும், அவ்வுணர்வின் வழியே சென்று பன்னாள் கலைகளைக் கற்றுப் பொருளுணர்ந்தும் என்ன பயன், அக் கலைகளின் திறனை ஆராய்ந்து தெளிதலில்லாதவிடத்து?

கலையுணர்வென்றது கலை கற்கும் வேட்கையையும் கற்றுணர்ந்தென்றது, கற்குஞ் செயலையும் உணர்த்தின. வேட்கையும் அதனாலான செய்கையும் நிகழ்ந்தவாயினும், பயனாகிய தெளிதல் நிகழாவழி வீணாதலின் என்னாம் என்றார். முற் செய்யுளில் திறனெனப் பொதுவினின்றது ஈண்டுக் கலைத்திறனென விதந்துகொள்ளப்பட்டது.

3. மூதறிவும் சற்று முறை
மறக்கும் முன் ஏறு
தாதலின் ஆய்தல் கடன்.

பழைமை பொருந்தி விளங்கி வரும் அறிவும் சிறிது நூன்முறை மறக்கும்; மேல் உயராது; ஆதலால், திறனாராய்தல் கலை பயில்வோர் கடமையாம்; முன்னேறுதென்றதனால் வளர்ச்சி கருதினமையின், மூதுமை பழைமையின் மேனின்றது. நூன்முறையாவது, நூல் நடக்கும் நெறி; இனி, 'முறை' யென்பதை நன் முறையெனினும் ஆம். இவை இரண்டு பாட்டானும் திறனாய்தலின் இன்றியமையாமை கூறினார்.

4. ஆவன தேர்ந்தூட்டும்
ஆய்போலும் ஆய்ந்தறிந்
தாவன தேர்ந்தோது வான்.

நூலின் திறனாய்ந்த நுண் பொருள்கள் ஆய்ந்து அவற்றுள் முதன்மையாவன தேர்ந்தெடுத்துப் பிறர்க்குரைக்கும் ஆசிரியன், அவ்வப்போதுந் தேவையானவை தேர்ந்து தன் மகார்க்கூட்டுந் தாயை ஒக்கும்.

ஊட்டுதலன்றித் தேர்ந்தூட்டுதலே தாய்க்குச் சிறப்பாதலும் ஓதுதல் கற்பித்தலின்மேற் றாதலும் முறையே பொருளானும் உவமையானும் இனிது பெறப்பட்டன. முதன்மையாவன என்றது தலைமையுந் தேவையுங் கருதிற்று.

5. குறைநீக்கா தேற்ற குணம்
தூக்கி நின்ற
திறனாய்தல் செம்மை நெறி.

குற்றத்தை ஒதுக்காது பயன் முகமாக்கிக் கொண்டு தழுவிய குணத்தைப் பெரிது கருதி நின்ற திறனாய்தல் செவ்விய ஆராய்ச்சி முறையாகும்.

'குணநாடி குற்றமுநாடி' யென்றும், 'குற்றமுங் குணமாக் கொள்ளுங் கொள்கை' என்றுங் கூறுபவாகலின், திறனாயும் நெறிகள் இன்ன வென்றார். 'ஏற்ற நின்ற திறனாய்தல்' என்க. திறனாய்தல் ஒரு சொல்லாய் நின்றது. குறைகளும் நன்மையின் விளக்கத்திற்கே பயன்படுதல் இயற்கை நெறியாதலின்; அந் நெறி வழியே சென்று குணங்கட்கு உயர்வு தேற்றும் ஆராய்ச்சிமுறை 'செம்மை நெறி' எனப்பட்டது. இவை இரண்டு பாட்டானும் திறனாயும் முறை நுவலப்பட்டது.

6. திருத்த அமைந்த
திறனாய்வு கொண்டு
மருட்டுவர் மாண்பில் லவர்.

இயற்கையானன்றிப் பன்னாள் முயன்று கற்றுங்கேட்டுந் தமதறிவைத் திருத்த அதனாற்செயற்கையான் அமைந்த திறனாய்தல் கொண்டு குணமாட்சி யில்லாதவர் அறியா உலகத்தை மயக்கி

மகிழ்வர். இயற்கையுணர்வின்றி முற்றுஞ் செயற்கையானமைந்த தென்றற்குத் 'திருத்த அமைந்த' வெனவும் பிறரை மயக்கி மகிழ்தலே அத் திறனாய்வின் பயனல்லது வேறின்மையின் 'மருட்டுவர்' 'மாண்பில்லவர்' எனவும் விளக்கினார். மாண்பு புலமையெனலும் ஒன்று.

7. பூவின் எழில் கண்டு
போற்றாது மற்றதனைத்
தாவிச் சிதைப்பாருளர்.

மலரின் அழகை அதன் இயற்கை நிலையிற் பற்றின்றி நுகர்ந்து பேணாமல் அதனைப் பற்றிச் சிதைத்து நுகர்வாரும் உள்ளனர். அது தவறென்றார். எழிலும் காண்டலும் பொதுவினின்று ஏனைப்புலனிகழ்ச்சிகளும் உணர்த்தின. போற்றுதல், சிதையாது காத்து மேன்மேல் நுகர்தலும், நுண்ணிதின் நுகர்தலுமென்க. மற்று, வினைமாற்று. நுகர்ச்சி பொருளிலுள்ளதாக நினைத்து மலரைப் பற்றுதலின் 'தாவி' யென்றும், அவர் நுகர்வாரல்லர் என்றற்குச் 'சிதைப்பார்' என்றும், தமக்கினமாகாமையின், பிறர் மேல் வைத்து 'உளர்' என்றுங் கூறினார். சொற்களையும் பொருள்களையும் நூலமைப்பினையுஞ் சிதைத்து ஏதோ திறனாய்வார் போல்வாரை நோக்கிற்றாகலின் இச் செய்யுள் பிறிது மொழிதலென்னும் அணி.

8. தாம்ஒன் றியற்றார்
தவறுடையார் தாழ்கடையர்
காணார் கசடன்றி மற்று.

தாம் ஒரு நூல் இயற்றமாட்டார்; புலமையாற் குற்றமுடையர். குணத்தினால் தாழ்ந்த கடைப்பட்ட நிலையினர். அத்தகையர் பிறர் இயற்றிய நூலில் திறனாயப் புகின், குற்றத்தையன்றி வேறுநலனொன்றுங் காணமாட்டார்.

வேண்டுவன வருவித்துக் கொள்ளப்பட்டன. இயற்றார், உடையர், கடையர் என்பன அத்தகையார் சிலர்மேனின்று வினைமுதலாகிக் காணார் என்னும் வினைகொண்டு முடிந்தது. ஒரு நூலின் திறனாய்தற்கு அத்துறையிற் பழக்கமும், குறையற்ற புலமையுங் குணநலனும் வேண்டுமென்றார். இவை மூன்று பாட்டானும் திறனாய்வார் போன்று தவறு செய்வாரியல்புகள் இன்னவென்பது கூறினார்.

9. ஆக்கல் அரிதாம்
அழித்தல் மிக எளிது
நோக்கி நுவல்க திறன்.

ஒரு நூலை இயற்றுதல் அரிய செயலாகும்; குறை கூறி அதன் வழக்கைக் கெடுத்தல் மிக எளிய செயல். ஆதலால் குணங் குற்றமாகிய இரண்டையும் நோக்கி, திறனை எடுத்துக் காட்டுக. நோக்கி யென்றது குணங் குற்றம் நாடுதலேயன்றி அவற்றின் மிகை நாடுதலும் உட்கொண்டு நின்றது. நன்மைக் கூறுண்டாக நூலியற்றுதலின் அருமை புலப்படுத்தினாராகலின், திறனாய்வார் அவ்வருமை தெரிந்து ஆராயுங் கடமையுடையார் என்பது இதனாற் பெறப்பட்டது.

10. ஆசற நன் காய்ந்தே
அறையுந் திறன் வேறாம்
ஆசிரிய னாதலும் வேறு.

ஒரு நூலைக் குற்றமற நன்றாக ஆராய்ந்து அதன் திறனைச் சொல்லுதல் வேறு. நூலியற்றும் ஆசிரியனாதலும் வேறு.

இரண்டும் வேறுவேறு தன்மையுடைத் தென்றபடி. ஆசற ஆய்தலென்க. திறனறைதலெனப் பின்றொடருக் கேற்ப உரைத்துக் கொள்ளப்பட்டது. கூர்த்த அறிவொன்றினாலாயும் ஆராய்ச்சியாளனைப்போலன்றிப் பகுத்தறிவின் முனைப்பவிந்து அன்பொளி தன்னைக் கவிந்து இயக்க அதன் வயமாகி ஆண்டுத் தோன்றும் உண்மைகளைப் புலப்படுத்துவோன் ஆசிரியனாகலின் அவனுயர்வு கருதி 'ஆதலு' மெனச் சிறப்பும்மையோடு கூறினார். இதனால் ஆராய்ச்சியாளரும் ஆசிரியரும் வேறு வேறாதல் உணர்த்தப்பட்டது.

Phone. 55034. Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

எங்கள் குருகுலம்

1. நாட்டில் பல குருகுலங்கள் இருக்கின்றன. ஆயினும் அவற்றிற் பெரும்பாலானவை 'குருகுலம்' என்ற பெயருக்கேற்ப ஒரு குருவின் சூழலில் இயங்குவதில்லை. எங்கள் குருகுலம், சங்க நூற் பெரும்புலவரும், செஞ்சொற் கொண்டலும், சித்தாந்தச் செஞ் ஞாயிறும், திருமந்திர நூற் பேராசிரியரும், சிறந்த சான்றோரும், தவஞானச் செம்மலுமாகிய ஆசிரியர் இளவழகனார் அவர்களின் வாழ்க்கைப் பணியாக மலர்ந்து அவர்கள் தலைமையிலேயே பண்டைக் காலத்துத் தவப் பெரியோர் 'ஆசிரமமே'யெனத் தவஇருக்கையாய் வளர்ந்து வருகின்றது.

2. நாட்டிலுள்ள குருகுலங்கள் பலவும் சிறுவர்களை மட்டும் இக்காலப் பொதுக் கல்வியைக் கொடுத்துப் பழக்கி வருகின்றன. எங்கள் குருகுலம் மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கத்தில் சிறுவர்களைப் பழக்கி அவர்கட்குக் குறைந்த அளவு ஒரு மொழிப் புலமை, ஒரு கலைக்கல்வி, ஒரு தொழிற் பழக்கம், ஒரு சமயப் பயிற்சி, ஓர் உயிர்த் தொண்டு என்பவற்றைக் கொடுக்க முயன்று வருவதோடு, ஆங்காங்குள்ள முதியோர்களையும் ஊக்கி இணக்கி, அவரவர் நாட்டு மொழி, கலை, தொழில், அருள், பணி என்னும் ஐவகை வாழ்வியல் துறைகளில் கருத்திருத்துமாறு செய்து வருகின்றது. சென்னையில் மட்டும் இவ்வகையில் ஆடவர்களும் மாதர்களுமாக ஏறத்தாழ 500 தனியன்பர்களும், 300 குடும்பங்களும் எங்கள் குருகுலத்திற் சேர்ந்து தம் சாதி சமய வேறுபாடுகளை மறந்து ஆசிரியருடன் பழகி அவர்கள் அறவுரைகளையும் தொடர்ந்து கேட்டு ஈடுபட்டு முன்னேறி வருகின்றனர்.

3. எங்கள் குருகுலம் பல்வேறு வாழ்க்கைத் துறைகளில் உள்ளவர்களையும் அவரவர்கள் நிலைகளில் தெளிவும், ஊக்கமும், செயல் திறமையும், நேர்மையும் பெறுமாறு செய்யப் பல வழிகளிலும் முயன்று வரும் ஒரு நன்பதைப் பணி நிலையம். இவ்வகையில் அது, ஆசிரியர் அவர்களால் மிகவும் ஆழ்ந்தகன்று பார்ந்த போக்கில் பலகால் தெளிவு நிலையில் எண்ணி வகுக்கப்பட்ட பன்னிரண்டு பிரிவுடைய பணி (நிர்மாண)த் திட்ட மொன்றையும் உடையதாக இருக்கிறது. அப்பணித்திட்டம் காந்தியடிகள் முதலிய உலகப் பெரியோர்களின் பழைய, புதிய கொள்கைப் பண்பாடுகளுக்கு ஏற்ப அமைந்து இயக்கி வருகின்றது.

4. நாடு பல்வேறு மொழி, சமய, சாதி, அரசியல் கட்சி வெறிக்கு ஆளாகி அல்லலுறுகின்ற நிலையை மாற்றி, மக்கட்கும் அரசினர்க்கும் இடையில் சங்கச் சான்றோர்களைப் போல நின்று இருதிறத்தார்க்கும் உதவும் நோக்கமுங் கொண்டது, எங்கள் குருகுலம். அரசியல் சார்பற்ற, சட்ட திட்டங்கட் குட்பட்ட, சான்றாண்மை இயக்கமாய் இயங்கி, நாட்டு மக்கள் எல்லோருக்கும் சமயம், அரசியல், சீர்திருத்தம் முதலிய துறைகளில் நல்ல தெளிவை உண்டு பண்ண வேண்டும் என்பது கருத்து.

5. எல்லாவற்றிற்கும் மூலமாக, உலகப் பொது மறையும், வாழ்க்கை வேதமுமாகிய திருக்குறளுக்கு மாம்பாக்கத்தில் ஒரு செயலகம் அமைத்து, ஒவ்வோர் அதிகாரத்துக்கும் ஒரு தனி இடமாக 133 இடம் வகுத்து அவ்வவ்வதிகாரக் கருத்துக்களை அங்கங்கே கூடிய மட்டும் செயல் முகமாகக் காட்டி, குருகுலப் பணிகளை எல்லாம் அச் செயல் முகப் பணிகளிலேயே அடக்கி, அங்கும் எங்கும் நடைபெறுமாறு செய்து வருதலாகிய மிகப் பெரிய குறிக்கோளும் செயலும் எங்கள் குருகுலம் மேற்கொண்டிருக்கின்றது.

இனி, நமது நாட்டின் இக்காலக் குறைகளை எல்லாம் தீர்க்க வேண்டும் என்று எண்ணி, சங்கச் சான்றோரே என வயங்கும் சிறந்த ஒரு தமிழ்ச் சான்றோர், திருக்குறள் வழியில் தாம் கண்ட கனவைத் தாமே நனவாக்கப் பாடுபட்டு வருகிறார் என்பதையும், அதற்காக ஏறத்தாழ ஒரு நூறாயிரம் ரூபா வரை தாம் ஒருவராகவே சிறிது சிறிதாகத் தேடிச் செலவிட்டுத் தம் வாழ்க்கைப் பணியாக மாம்பாக்கம் குருகுலத்தை உருவாக்கியிருக்கிறார் என்பதையும் உணர்கிறபோது, தமிழ் மகன் ஒவ்வொருவனும் தலை நிமிர்ந்து நின்று மகிழ்வான் என்பதில் ஐயமில்லை.

ஆகலின், குருகுலத்தைப்பற்றியும், அதன் கொள்கைகள், பணித் திட்டங்கள் செயல்களைப் பற்றியும், பொது மக்கள் பலரும், அதிகாரிகள் பலரும் அறிந்து கொண்டு பயன் விளைப்பார்களாக! கூடிய விரைவில் 'குருகுல மாநாடு' ஒன்றைச் சென்னையில் நடத்தவும் திட்டமிட்டிருக்கின்றது. அது வெற்றிகரமாக நடந்து பயன் விளைக்குமாறு குருகுலத்தாரும் குருகுலத்தைப் பற்றி அறிந்துள்ள முல்லைக் கொடி நேயர்களும் ஆவன செய்து நலமுறுதல் கடமை!

—ஒளி.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அங்)